தந்தி : STATEHAJJ தொலைபேசி : 044-28252519
மின்அஞ்சல் : tnhajj786@vsnl.com 28227617
இணையதளம் : hajjtn.org ஃபேக்ஸ் : 28276980

**தமிழ் நாடு மாநில ஹஜ் குழு**
(தமிழக அரசால் நிறுவப்பட்டது)

**கா. அலாவுதீன், இ.ஆ.ப.,**
உறுப்பினர் & செயல் அலுவலர்.

மூன்றாவது மாடி, 'ரோஸி டவர்',
எண்.13 (ப. எண்.7), மகாத்மா காந்தி சாலை,
(நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை),
சென்னை–600 034.

**கடித எண்.349/ஹ.கு/சி/2010, நாள் –07–2010**

பெறுநர்

<u>உறை எண்.</u>

ஐயா,

பொருள்: ஹஜ் 2010 – தமிழ் நாட்டைச் சேர்ந்த புனித ஹஜ் பயணிகளுக்கு, மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடுதல் குறித்த நிகழ்ச்சி நிரல் – தெரியப்படுத்தப்படுகிறது.

––––––––––––––

தமிழ் நாட்டைச் சேர்ந்த புனித ஹஜ் பயணிகளுக்கு (மூளைக்காய்ச்சலுக்கு எதிரான) தடுப்பூசி போடும் நிகழ்ச்சி (இன்ஷா அல்லாஹ்) 22–7–2010 மற்றும் 23–07–2010 தேதிகளில் பல்வேறு தடுப்பூசி மையங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட மாவட்டம்/பகுதிகளைச் சேர்ந்த புனிதப் பயணிகள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட மையங்களை அணுகுமாறும், இதர பிற மையங்களை அணுகவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் குறிப்பிட்ட மையங்களில், அம்மையங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட புனிதப் பயணிகளுக்கான தடுப்பூசி மருந்து மட்டுமே வழங்கப்படும்.

2. தடுப்பூசி முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மையங்களின் பெயர் மற்றும் முகவரி, அம்முகாம்களில் உள்ளடக்கிய பகுதிகள், தடுப்பூசி முகாம்கள் நடத்த தீர்மானித்துள்ள தேதிகள் முதலிய விவரங்கள் பின்வருமாறு –

| வ. எண் | நாள் மற்றும் கிழமை | தடுப்பூசி மையம் | மாவட்டங்கள்/பகுதிகள் உள்ளடக்கியது |
|---|---|---|---|
| 1. | 22–7–2010<br>வியாழக்கிழமை | முஸ்லிம் அநாதைகள் இல்லக் குழு,<br>காதிர் நகர், ஹை கிரவுண்ட்ஸ்,<br>திருநெல்வேலி–627 011. | திருநெல்வேலி மற்றும்<br>கன்னியாகுமரி<br>மாவட்டங்கள் |
| 2. | 22–7–2010<br>வியாழக்கிழமை | சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரின் அலுவலக வளாகம், இராமநாதபுரம். | இராமநாதபுரம் மாவட்டம். |

| வ. எண் | நாள் மற்றும் கிழமை | தடுப்பூசி மையம் | மாவட்டங்கள்/பகுதிகள் உள்ளடக்கியது |
|---|---|---|---|
| 3. | 23–7–2010<br>வெள்ளிகிழமை | கே.எம்.டி. மருத்துவமனை,<br>11, திருச்செந்தூர் ரோடு,<br>காயல்பட்டினம்–628 204,<br>தூத்துக்குடி மாவட்டம். | தூத்துக்குடி மாவட்டம். |
| 4. | 23–7–2010<br>வெள்ளிகிழமை | சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர் அலுவலகம்,<br>பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் (பெண்கள்) பயிற்சிப் பள்ளி, விஸ்வநாதபுரம், மதுரை. | மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள். |

3. மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணிக்குள் தாங்களும், தங்கள் குழுவைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களும், தங்கள் உறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தடுப்பூசி மையங்களில் அணுகி, தடுப்பூசியை <u>**இலவசமாக**</u> போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **1 எம்.எல் அளவுள்ள டிஸ்போசபில் சிரிஞ்சினை தங்கள் குழுவிலுள்ள ஒவ்வொரு நபரும் தவறாது கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

4. உலக சுகாதார நிறுவனத்தின் நெறிமுறைகள் மற்றும் சவூதி அரசின் சுகாதார விதிமுறைகளின்படி, இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மூளைக் காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி அளிக்கப்பட்டு, அவ்வாறு அளிக்கப்பட்ட சான்றிதழ்களை தங்களுடன் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறான குழந்தைகள் தங்களின் பெற்றோருடன் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

5. ஹஜ் பயணம் புறப்படும் சமயத்தில் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு, இவ்வசதியைத் தாங்கள் பயன்படுத்திக் கொண்டு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்காணும் மையங்களில் வழங்கப்படும் தடுப்பூசியை, புனிதப் பயணி எவரேனும் போட்டுக் கொள்ளவில்லையெனில், மூளைக் காய்ச்சல் தடுப்பூசி மருந்து போட்டுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை பின்னர் தாங்களே மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

**உறுப்பினர் – செயல் அலுவலருக்காக.**

<u>நகல்</u>:
இயக்குநர், சுகாதாரப் பணிகள், சென்னை–6.
இயக்குநர், கிங் இன்ஸ்டியூட், கிண்டி, சென்னை–32.
சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர்கள், திருநெல்வேலி / இராமநாதபுரம்/ தூத்துக்குடி/ மதுரை.
மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.
தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை.
நில சீர்திருத்தத்துறை முதன்மைச் செயலாளர்/ஆணையரின் நேர்முக உதவியாளர், சென்னை.
தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும்.